DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.273/2023**

Deposition of Witness : RW -2 (2− ம் எதிர்மனுதாரர் தரப்பு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கார்த்திக் | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 03.03.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை− தொடங்கப்பட்ட நேரம் : 11.16 மு.ப

நான் இம்மனுவின் 2ம் எதிரமனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான்.

நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **எ.ம.சா.ஆ−3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

விபத்து சமயத்தில் இறந்த நபர் சாலை விதிகளை கடைபிடித்து மெதுவாகதான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்த ஹரிகிருஷ்ணன் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் கோவையை சேர்ந்த



SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.03.03 11:34:41 +0530

ரஷியா என்பவருடையது என்றும் இருவருக்கும் இடையே என்ன சம்பந்தம் குறித்து மனுதாரர்கள் நிரூபிக்கவில்லை என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றும் அவர் ஹரிகிருஷ்ணனின் நண்பர் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்த ஹரிகிருஷ்ணனுக்கு வயது 20 என்றும் விபத்து சமயத்தில் மேற்படி இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு ஊர்ஜிதத்தில் இருந்தது என்றும் சொன்னால் 3ம் தரப்பினருக்கான காப்பீடும் மட்டும் ஊர்ஜிதத்தில் இருந்தது. மூன்றாம் தரப்பினருக்கு காப்பீடு வசூலிக்கப்பட்டுள்ளதால் மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரர் மனு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 11.23 மு.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2026.03.03 11:34:46 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 03.03.2026